இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 348 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 12 – திங்கள்கிழமை 28 ஜூலை 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 348 : Thiruvalluvar Year - 2056 - Aadi 12 - Monday 28 July 2025 - Madurai 12 Pages ₹ 5.00


## தமிழ்நாட்டு இரயில்வே திட்டங்கள் – மீனவர்கள் வாழ்வாதாரம் – சேலம் பாதுகாப்பு தொழிற்பூங்கா – மாணவர்களின்

# கல்விக்கான நிலுவைத் தொகை ரூ.2151.59 கோடியை உடனே விடுவிப்பீர்!

## பிரதமரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை !

**சென்னை, ஜூலை 28 -**

**தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய திட்டப் பணிகள் மற்றும் கோரிக்கைகள் குறித்த மனுவினை பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடம் அளித்துள்ளது தொடர்பாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக்கான நிதி, ஏழை நடுத்தர மக்களின் போக்குவரத்துக்காக இரயில் திட்டங்கள், மீனவர்களின் வாழ்வாதாரம், சேலம் பாதுகாப்புத் தொழிற்பூங்கா ஆகியவற்றை வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடம் கோரிக்கை மனு அளித்துள்ளோம்.

மக்களின் உணர்வுகளுக்கும் மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மதிப்பளித்து உரிய தீர்வினைப் பிரதமர் வழங்குவார் என்று நம்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கோரிக்கை மனு விவரங்கள்**

தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய திட்டப் பணிகள் மற்றும் கோரிக்கைகள் குறித்த மனுவிற்கு நேற்று முன்தினம் (26.7.2025) காலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒப்புதல் அளித்திருந்தார்.

மேற்படி கோரிக்கை மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விவரங்கள் பின்வருமாறு:

**சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் நிதி!**

தமிழ்நாடு அரசால் 2018ஆம் ஆண்டு முதல் சமக்ரா சிக்ஷா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு தொடர்ந்து செயல்திறனை அதிகரித்துள்ளது. தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020 முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையை ஒன்றிய அரசு வைத்துள்ளது. ஆனால், தமிழ்நாடு அரசு சட்டப்பூர்வ மற்றும் கொள்கை அடிப்படைகளில் தேசியக் கல்விக் கொள்கை (NEP) 2020



இன் சில அம்சங்களில், குறிப்பாக மும்மொழிக் கொள்கை மற்றும் 5+3+3+4 கட்டமைப்பில் பள்ளிக் கட்டமைப்பு மாற்றம் ஆகியவற்றில் தனது மாற்றுக்கருத்துகளை தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு பள்ளிக் கல்வி அமைப்பில் தற்போது 43.90 லட்சம் மாணவர்கள், 2.20 லட்சம் ஆசிரியர்கள் மற்றும் 32,000க்கும் மேற்பட்ட உதவிப் பணியாளர்கள் உள்ளனர். இந்த அளவிலான மற்றும் முக்கியத்துவ மிக்க திட்டத்திற்கு தேவையான நிதிகளை வழங்காமல் இருப்பது, இலட்சக்கணக்கான மாணவ மாணவியரின் எதிர்காலத்தை பாதித்து வருகிறது.

இந்த சூழ்நிலையில், இந்தியப் பிரதமர் அவர்களிடம், 2024-25 ஆம் நிதியாண்டிற்கான நிலுவையிலுள்ள ரூபாய் 2,151.59 கோடி ஒன்றிய அரசின் பங்கை உடனடியாக விடுவிக்க வும், 2025-26ஆம் ஆண்டிற்கான முதல் தவணை நிதியையும் விரைவாக வழங்கிடவும், PM SHRI புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை நிபந்தனையாக்காமல் நிதியினை விடுவிக்கவும் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**தமிழ்நாட்டிற்கான இரயில்வே திட்டங்கள்!**

பத்தாண்டுகளுக்கு முன்பு அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்படாமல் உள்ள பல முக்கியமான இரயில் பாதை திட்டங்களான திண்டிவனம் செஞ்சி திருவண்ணாமலை (70 கி.மீ) இரயில் பாதை, ஈரோடு பழனி (91 கி.மீ) இரயில் பாதை, அருப்புக்கோட்டை வழியாக மதுரை தூத்துக்குடி (60 கி.மீ)இரயில் பாதை, அத்திப்பட்டு புத்தூர் (88 கி.மீ.) இரயில் பாதை, மகாபலிபுரம் வழியாக சென்னைகடலூர் (180 கி.மீ) இரயில் பாதை ஆகிய திட்டங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கக்கேட்டும்;

87 கிமீ நீள திருவனந்தபுரம் கன்னியாகுமரி இரட்டை பாதை பணியினை துரிதப்படுத்திடவும், திருப்பத்தூர் - கிருஷ்ணகிரி ஓசூர் புதிய பாதைக்கு ஒப்புதல் அளித்திடவும், கோயம்புத்தூர் பல்லடம் கரூர், கோயம்புத்தூர் கோபிசெட்டிபாளையம் பவானிசேலம், மதுரை மேலூர் துவரங்குறிச்சி விராலிமலை இனாம்குளத்தூர் மற்றும் மதுரை நகரைச் சுற்றி புறநகர் ரயில் ஆகிய திட்டங்களுக்கு வழித்தட ஆய்வு / விரிவான திட்ட அறிக்கை ஒப்புதல் கோரியும்;

சென்னை பெருநகரப் பகுதியில் புறநகர் இரயில் சேவைகளை உச்ச நேரங்களில் இயக்க இடைவெளி நேரத்தை குறைத்திடவும், குளிர்சாதன மற்றும் குளிர்சாதன வசதி இல்லாத மின்சார இரயில் பெட்டிகளை (EMU) கூடுதலாக ஒதுக்கீடு செய்திடவும், முக்கிய புறநகர் வழித்தடமான தாம்பரம் மற்றும் செங்கல்பட்டு இடையேயான 4வது வழித்தடத்தை அனுமதித்து செயல்படுத்திடவும், ஆவடி ஸ்ரீபெரும்புதூர் இரயில் பாதை திட்டத்தை விரைவாக செயல்படுத்திடவும், விரைவான ஒப்புதல்கள், நிதி ஒதுக்கீடு மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறும் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**கோயம்புத்தூர் மற்றும் மதுரை மெட்ரோ இரயில் திட்டங்களுக்கு ஒப்புதல்!**

கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இரு நகரங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கி, கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் திட்டம் 34.8 கி.மீ.க்கு ரூ.10,740.49 கோடியிலும் மற்றும் மதுரை மெட்ரோ இரயில் திட்டம் 32 கி.மீ.க்கு ரூ.11,368.35 கோடியிலும் கட்டி முடிப்பதற்கான திட்ட மதிப்பீடு தயாரித்துள்ளது.



மெட்ரோ இரயில் கொள்கை 2017 இன் படி, ஒன்றிய அரசும் மற்றும் தமிழ்நாடு அரசும், 50:50 சம பங்களிப்பு அடிப்படையில், இரு திட்டங்களையும் இணைந்து செயல்படுத்துவதற்கான, ஒப்புதலையும் நிதியுதவி யையும், விரைந்து வழங்கிட, ஆவன செய்யுமாறு இந்தியப் பிரதமர் அவர்களை முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளை விரைவாக விடுவிக்கவும் நிரந்தரத் தீர்வு காணுதல்**

சமீப காலமாக, இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதும், அவர்களது படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்கதையாகி வருகிறது. இந்த தொடர்ச்சியான கைதுகள் மாநிலத்தில் உள்ள ஏழை மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மோசமாக பாதித்து வருகிறது.

இவ்வாறு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடி படகுகளை விடுவிப்பது தொடர்பாக ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பல முறை கடிதங்களை எழுதியுள்ளார். தூதரக நடவடிக்கைகள் மூலம் பலமுறை முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், இலங்கை அரசால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்கிறது.

இந்த சிக்கலான பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காண இந்தியப் பிரதமர் அவர்கள் இதில் தனது நேரடி கவனத்தை செலுத்தும்படி முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளதோடு, கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களின் மீன்பிடி உபகரணங்களுடன் கூடிய படகுகளையும் விரைவில் விடுவிக்க முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

**சேலம் உருக்காலையின் மிகை நிலங்களை பாதுகாப்பு தொழில் பூங்காவிற்கு வழங்க கோருதல்**

2018-19ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தியில் தன்னிறைவை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு மற்றும் உத்தர பிரதேசத்தில் இரண்டு பாதுகாப்பு தொழில் துறை பெருவழிச்சாலைகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

1971-1975 காலகட்டத்தில், சேலம் உருக்காலை அமைப்பதற்காக 3973.08 ஏக்கர் நிலங்களை தமிழ்நாடு அரசு வழங்கியது. இதில் 1503.44 ஏக்கர் நிலம் இன்னும் பயன்படுத்தப்படாமல் உள்ளது. சேலம் உருக்காலையில் உள்ள பயன்படுத்தப்படாத நிலத்தைப் பயன்படுத்தி பாதுகாப்புத் தொழில் பெருவழிச் சாலையின் கீழ் சேலத்தில் பாதுகாப்பு தொழில் தொகுப்பினை நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசு ஆர்வமாக உள்ளது.

பிரதமர் அவர்கள் இவ்விவகாரத்தில் தலையிட்டு, சேலம் உருக்காலை வளாகத்தில் பயன்படுத்தப்படாமல் உள்ள நிலங்களை, பாதுகாப்புத் தொழில் பெருவழிச் சாலை அமைக்கும் திட்டத்தை விரைவில் நிறுவுவதற்கு ஏதுவாக திரும்ப வழங்க ஆவன செய்யுமாறு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி அவர்களிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மனுவை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று நேரில் வழங்கினார்.

---

## கங்கை கொண்டான் — கடாரம் கொண்டான்

# சோழப் பெருமன்னன் ராஜேந்திர சோழன் விழா!

## பிரதமர் மோடி பங்கேற்று ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தை வெளியிட்டார்! கங்கை கொண்ட சோழபுரத்தில் விழா!

**அரியலூர், ஜூலை 28-**

**‘கங்கைகொண்டான்; கடாரம் கொண்டான்’ சோழப் பெருமன்னன் ராஜேந்திர சோழன் விழா கங்கைகொண்ட சோழபுரத்தில் நடைபெற்றது இந்த விழாவில் பங்கேற்ற பிரதமர் மோடி, மாமன்னர் ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தை வெளியிட்டார்.**

தூத்துக்குடி விமான நிலையத்தில் 452 கோடி ரூபாய் மதிப்பில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள புதிய முனையத்தை பிரதமர் மோடி நேற்று முன்தினம் திறந்து வைத்தார். நான்காயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்ட பணிகளையும் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நேற்று, கங்கை கொண்ட சோழபுரம் வந்த பிரதமர் மோடி, கங்கைகொண்ட சோழபுரத்தில் உள்ள சோழீஸ்வரர் கோயில் சிற்பங்கள், கல்வெட்டுகள் மற்றும் அங்கு அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து ஒன்றிய கலாச்சாரத் துறை சார்பில் நடைபெறும் முதலாம் இராஜேந்திர சோழனின் பிறந்த நாள் விழா, கங்கைகொண்ட சோழபுரம் பெருவுடையார் கோயில் கட்டத் தொடங்கிய ஆயிரமாவது ஆண்டு விழா, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படை யெடுத்துச் சென்ற ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழாவில் பங்கேற்று, நினைவு நாணயத்தை பிரதமர் மோடி வெளியிட்டார்.

தூத்துக்குடி விமான நிலையத்தை திறந்து வைத்த பிரதமர் மோடி, பின்னர் சிறப்பு விமானம் மூலம் திருச்சி விமான நிலையத்திற்கு நேற்று முன்னிரவு வந்தார். விமான நிலையத்தில் இருந்து சாலை மார்க்கமாக பிரதமர் மோடி திருச்சி கலெக்டர் அலுவலக சாலையில் உள்ள பிரபல தனியார் நட்சத்திர ஓட்டலுக்கு வந்து தங்கினார். இதைத் தொடர்ந்து, நேற்று காலை (27ம் தேதி) ஓட்டலில் இருந்து வெஸ்ட்ரி பள்ளி ரவுண்டானா, நீதிமன்றம், பாரதிதாசன் சாலை, தலைமை தபால் நிலையம், குட்ஷெட் மேம்பாலம், டி.வி.எஸ். டோல்கேட் வழியாக விமான நிலையம் வந்தடைந்தார்.

தொடர்ந்து, திருச்சி விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் கங்கை கொண்ட சோழபுரம் பொன்னேரியில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிபேடில் வந்து இறங்கினார். ஹெலிபேடில் இருந்து பிரகதீஸ்வரர் ஆலயம் வரை 3 கி.மீ. தூரம் காரில் பிரதமர் மோடி சென்றார்.

கங்கைகொண்ட சோழபுரத்தில், பிரகதீஸ்வரர் ஆலய வளாகத்தில், மத்திய கலாசாரத் துறை சார்பில் ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடி திருவாதிரை விழா, பிரகதீஸ்வரர் ஆலயத்தின் ஆயிரமாவது ஆண்டு விழா, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுத்து சென்ற ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழா என முப்பெரும் விழா கடந்த 23ம் தேதி முதல் நடந்து வருகிறது.

நேற்று நடந்த நிறைவு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். முன்னதாக பிரகதீஸ்வரர் கோயிலில் பிரதமர் மோடி ஆடித்திருவாதிரை விழாவில் பங்கேற்று, ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தையும் பிரதமர் மோடி வெளியிட்டார். அங்கு நடைபெறும் இளையராஜாவின் இசை நிகழ்ச்சியிலும் பங்கேற்றார். பின்னர் அங்கிருந்து மதியம் 1.30 மணியளவில் ஹெலிகாப்டர் மூலம் புறப்பட்டு திருச்சி விமான நிலையத்திற்கு வந்து பிற்பகல் திருச்சி விமான நிலையத்திலிருந்து விமானம் மூலம்டெல்லிக்கு புறப்பட்டு சென்றார்.

நிகழ்ச்சியில் தமிழக அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எஸ்.எஸ்.சிவசங்கர் பங்கேற்றனர்.